**கவனிக்க.-** *2010.04.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1650 - 2010 අප්‍රේල් 16 වැනි සිකුරාදා - 2010.04.16

*1650 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 516 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 520 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2010, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை வான்படை

அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தர வான்படையில் ஆண்/பெண் அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன:

(அ) பரிபாலன நீதிப் பிரிவு (ஆண்/பெண்)

(ஆ) விமானத் தள நிர்மாணப் பிரிவு (ஆண்)

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்ப தாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) ***பரிபாலன நீதிப் பிரிவு :***

***தலைமை நீதி (சட்ட) அலுவலர் :***

வழக்கறிஞராக பட்டம் பெற்றிருப்பதுடன் வழக்கறிஞராக 10 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

* தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை நிரந்தர வான்படையில் விங் கமாண்டர் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

(ஆ) ***விமானத் தள நிர்மாணப் பிரிவு :***

சிவில் பொறியியல் அலுவலர் :

சிவில் பொறியியலில் BSc பட்டச் சான்றிதழ் / சிவில் பொறியியலில் NDT அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.

எந்திரவியல் பொறியியல் அலுவலர் :

எந்திரவியல் பொறியியலில் BSc பட்டச் சான்றிதழ்/ எந்திரவியல் பொறியியலில் NDT அல்லது அதற்கு சமமான தகைமைகள் இருத்தல்.

மின்னியல் பொறியியல் அலுவலர் :

மின்னியல் பொறியியலில் BSc பட்டச் சான்றிதழ்/மின்னியல் பொறியியலில் NDT அல்லது அதற்கு சமமான தகைமைகள் இருத்தல்.

***குவான்டிட்டி அளவை அலுவலர் :***

நில அளவை விஞ்ஞானத்தில் BSc பட்டம் பெற்றிருத்தல்.

* தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை நிரந்தர வான்படையில் பைலற் ஒபிசர்/பிளையிங் ஒபிசர்/பிளைட் லெப்டினனட் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

3. **வேறு தகைமைகள் :**

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(ஆ) குடியியல் நிலை.- விவாகமானவர்/விவாகமாகாதவர்

(இ) வயது .-

(1) பரிபாலன நீதிப்பிரிவு.- 25.07.2010 ஆந் திகதிக்கு வயது 40க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(2) விமானத் தள நிர்மாணப் பிரிவு :- 25.07.2010 ஆந் திகதிக்கு வயது 35 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(ஈ) உயரம்.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்

பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்

(உ) உடல்நிறை.- உடற்பருமன் சுட்டி $(BMI) = \frac{\text{நிறை (கி.கி.)}}{\text{உயரம் (மீ)}^2} < 25$

(ஊ) மார்பு.- ஆண் 32" (குறைந்தது)

(எ) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- CP2

(ஏ) தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற் படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப் படுத்துப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப் படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை நிரந்தர வான்படையில் பைலற் ஒபிசர்/பிளையிங் ஒபிசர்/பிளைட் லெப்டினனட் தரத்தில் (விமானத் தள நிர்மானப் பிரிவு) விங் கமான்டர் தரத்தில் (பரிபாலன நீதிப்பிரிவு) ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் இடத்தில் பயிற்சி பெறுவதற்கு தேவைப் படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப் படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10, 240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி "அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின்

10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதி யளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.-

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஆ) (16) ஆம் பந்தியில் கூறப் பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர் களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

| | |
|---|---|
| பைலற் ஒபீசர் | - ரூபா 2,29,200 (நிலையான) |
| ஃபிளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740- ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினனட் | - ரூபா 3,21,660-28 x 7,740 - ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர்- | - ரூபா 3,52,620-24 x 7,740 - ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 x 9480 - ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன்- | - ரூபா 4,41,060-18 x 12,600 - ரூபா 6,67,860 |

(ஆ) வேறு கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 5,250 ;
(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும் ;
(3) கடினப்படி : மாதமொன்றுக்கு ரூபா 600 ;
(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 ;
(5) விசேட கொடுப்பனவு : ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம் )
(6) மேலதிக கொடுப்பனவு : மாதமொன்றுக்கு ரூபா 1,000 ;
(7) சீருடை பேணுதல் படி : மாதமொன்றுக்கு ரூபா 255;
(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;
(9) உணவுப்படி : மாதமொன்றுக்கு ரூபா 9,839.70 (வெளி யிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;
(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;
(11) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளை களுக்கும்);
(12) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;
(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்;
(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத் தினருக்கும்) ;
(15) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து முப்பது மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப்பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(16) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படின் கொடுப்படற் பாலனவாகும்.

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டக் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர் களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 30.04.2010 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பயிலிளவலுக்கான விண்ணப்பம் - பிரிவு'' எனக் குறிப்பிப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப் பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப் படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல்தாபனத்தின் தலைமை யதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;
(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;
(3) விண்ணப்பக்காரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;
(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.
(5) விண்ணப்பக்காரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாகக் கொண்டுவருதல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்படமாட்டாது.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டப்ளியூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயார் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படை**

................ பிரிவில்

அரசாணைபெற்ற அலுவலருக்கான விண்ணப்பம்

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.) :----.
2. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு):----.
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
4. விண்ணப்பிக்கும் துறை :----.
5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.
6. நிரந்தர முகவரி :----.
7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :—.
8. அஞ்சல் முகவரி :----.
9. பிறந்த திகதி :----.
10. உயரம் :
11. மாவட்டம் :----.
12. தேர்தற் தொகுதி :----.
13. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
14. தொலைபேசி இலக்கம் :----.
15. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.
16. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ சர்வ கலாசாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | பொ.த. (சா./த.)<br>க.பொ.த. (உ./த.)<br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

17. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :- (தேவையாயின்)

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

22. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.

23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பத்தாரராயிருப்பின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டவராயிருப்பின் அல்லது பிணையில் விடப்பட்டவரா யிருப்பின் விபரங்கள் தருக : ----.

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

26. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. விண்ணப்பகாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத் துள்ள விடைகள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

4-379

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2010, வைகாசி மாதம் 14 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2010.03.25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மன்னார் நகரம் | மாந்தை தெற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மன்னார் நகரப் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மன்னார் |

4-431

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2010**

நிலஅளவையாளர் நாயகத்தால், உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை இரண்டு பகுதிகளாக நடைபெறும்.-

பகுதி I – ஆள் கூற்றுக் கணிப்பு.
பகுதி II – படம் வரைதல்

2. முதலாவது பகுதிப் பரீட்சை 2010 ஆம் ஆண்டு ஆனி மாதம் 19 ஆந் திகதியும், இரண்டாவது பகுதிப் பரீட்சை 2010 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21 ஆம் மற்றும் 22 ஆந் திகதிகளில் நடைபெறும். முதற் பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் இரண்டாவது பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். சான்றிதழ் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I மற்றும் பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :-

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்றைத் தயார்செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூறுகளைக் கணித்தல் ;

(ஆ) புலக் குறிப்பிலிருந்து ஒரு படத்தை பாகை மானி மூலமாகவும் ஆள் கூறு மூலமாகவும் சரியாகக் குறித்து பரப்பளவுகளைச் சரியாகக் கணித்தல்.

4. பரீட்சைக்கான விண்ணப்பங்களை கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்து ரூபா 300 பரீட்சைக் கட்டணத்துடன் பதிவுத்தபால் மூலம் ''சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியதலாவை'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணம் முத்திரைகளாகவோ அல்லது காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. காசுக் கட்டளைகள் ''சிரேஷ்ட பிரதி நிலஅளவையாளர் நாயகம் (நிலஅளவை பயிற்சி நிறுவனம்), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை'' என்னும் பெயரில் எடுக்கப்படல் வேண்டும். கட்டணத்தை பணம் மூலம் செலுத்துவதானால் அளவையியல், படமாக்கல் நிறுவனம், தியதலாவையில் செலுத்தலாம். மூலப்பற்றுச்சீட்டு அல்லது மூலக் காசுக்கட்டளையை இணைக்கவும். (அவற்றை ஒட்ட வேண்டாம்.) தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2010'' என எழுதப்பட வேண்டும்.

5. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

6. 2010 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருப்பினும், வரைதல் உபகரணங்கள் ஆள் கூறுகளைக் கணிக்க உதவும் கணித வாய்ப்பாடுகள் மற்றும் அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற்பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப்பொறிகள் (Non Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

8. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரை ஒவ்வொரு பாடத்திலும் பரீட்சிப்பதற்கு முன்பு, மேற்பார்வையாளரைத்

திருப்திப்படுத்துமாறு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம் :-

(அ) ஆள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு பரீட்சை தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் நிழற் படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச்சீட்டு ;

8 (ii) பந்தி 8 (i) இல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சிக்கப்பட மாட்டார்.

9. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடத்தப்படும்.

எஸ். எம். டபிள்யூ. பிரனாந்து,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
த. பெ. இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 05,
2010.03.31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

*நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2010*

சுட்டிலக்கம் [ ]
(அலுவலக பாவனைக்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி :----.
(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : Mr./ Mrs/ Miss :----.

(ஆ) பால் :----.

(இ) பதவி :----.

(ஈ) தொழில் பார்க்குமிட முகவரி :----.

(உ) நிரந்தர முகவரி :----.

(ஊ) பிறந்த திகதி :----.

(எ) சித்தியடைந்த உயர் பரீட்சையும் மொழியும் :----.

(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :----.

(ஐ) செலுத்திய கட்டணம் : ரூபா :----.

(ஒ) காசுக் கட்டளை இலக்கம்/பற்றுச்சீட்டிலக்கம் :----.
வழங்கிய அலுவலகம் :----.
திகதி :----.

(தியத்தலாவை அளவையியல், படமாக்கல் நிறுவனத்தில் செலுத்தப் பட்டிருப்பின் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை அல்லது காசுக் கட்டளை மூலம் செலுத்தப்பட்டிருப்பின் அதன் மூலப் பிரதியை இணைக்கவும்.)

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும் மற்றும் உண்மையானதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

4-389

---

## இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010

## DEPARTMENT OF SRI LANKA IMMIGRATION & EMIGRATION LIMITED/ OPEN COMPETITIVE EXAMINATION - 2010 FOR RECRUITMENT EXAMINATION TO THE POSTS OF AUTHORIZED OFFICERS

இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு பின்வரும் தகைமையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போட்டிப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் ஒழுங்குமுறை அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன், வெற்றிடங்களில் (60%) வீதம் திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும், மிகுதி (40%) வீதம் அரச சேவை/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் நிரப்பப்படும் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணகிகையில் 10% வீதம் மாத்திரம் பெண் உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்படும்.

2. **விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்.**- இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய "ஏ4" அளவுள்ள (சென்றி மீற்றர் 21× 29) தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரியால் விண்ணப்பப் படிவத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1.0 தொடக்கம் 5.0 வரை முதல் பக்கத்திலும் 6.0 தொடக்கம் 12.0 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியுள்ளவற்றை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடக்கப்படும் வகையில் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் அதற்குரிய தகவல்களை தமது சொந்த கையெழுத்தினால் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்தில்லாத விண்ணப்பங்களும், தகவல்கள் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளல் பயனுடையதாக அமையலாம். அத்துடன் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பம் பரீட்சைக்கான

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதனை கவனத்திற்கொள்க. விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது விண்ணப்பததின் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் கட்டாயமாகும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2010.05.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ''பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

(அ) திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும்போது "இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010" எனவும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் போது "இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2010'' எனவும், திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இரண்டிற்கும் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறும் பட்சத்தில் ஒரு விண்ணப்பப் படிவத்தினூடாக மாத்திரம் விண்ணப்பித்தில் வேண்டும். இதன்போது "இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010" என விண்ணப்பப் படிவத்தினை அனுப்பும் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) அரச சேவை/ மாகாண சேவைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அல்லது அது தொடர்பான எந்த ஒரு ஆவணமோ தபாலில் காணாமற்போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படமாட்டாது.

(ஈ) உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக இல்லாத அல்லது முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(உ) விண்ணப்பதாரிகள் தாம் தகுதி பெற்ற மொழி மூலம் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

3. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டப கண்காணிப்பாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

4. **பொய்யான தகவல்கள்**.- எந்தவொரு விண்ணப்பதாரியும் தகுதியற்றவர் என நிரூபிக்கப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடக்கும் சமயத்திலோ பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தித் தகுதியை நிராகரிப்பதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவரினால் வழங்கப்பட்ட தகவல் அவருடைய அறிவுக்கு எட்டியவரை பொய்யென தெரியவந்தால் அல்லத அவர் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்று மறைத்துவிட்டார் என கண்டுபிடிக்கப்பட்டால் அவர் அரச சேவையில் இருந்து நிக்கப்படுவதற்கு இடமுண்டு.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- இந்த பதவிக்குரிய ஒன்று திரட்டப்பட்ட மாதாந்த சம்பள அளவுத்திட்டம் பொ. நி. சு. 6/2006 (iv) இன் MN 5 - 2006 A ரூ. 16,720 - 10 × 320 - 11 × 365 - 15 × 450 - 30,685 ஆகும். இச்சம்பளம் மேற்கறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமையவே வழங்கப்படும். பதவிக்கு நியமிக்கப்பட்டு 4ஆவது சம்பள ஏற்றத்திற்கு செல்லமுன் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றும் பட்சத்தில் பரீட்சைக் கட்டணம் ரூபா 350 ஆகும். திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு பரீட்சைக்கு மாத்திரம் தோற்றும் பட்சத்தில் பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். இந்த கட்டணத்தை எந்தவொரு மாவட்டச் செயலகத்திலும் அலல்து பிரதேச செயலகத்திலும் வருமான தலைப்பு 4000-20-03-90-00 என்ற கணக்கில் வைப்பிலிட்டு அதற்காகப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் பத்திரத்தில் குறிக்கப் பட்டுள்ள இடத்தில் ஒட்டவும். (பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் செலுத்தப்பட்ட அலுவலகம்) ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். எக்காரணத் திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்வது பயனளிக்கலாம்.)

7. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தன்று விண்ணப்பதாரியின் வயது 18 இற்குக் குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் தொடர்பாக இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியின் உடல் தேர்ச்சியில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதுடன் அது பின்வருமாறு அமைதல் வேண்டும். ஆண் விண்ணப்பதாரிகளின் உயரம் குறைந்த பட்சம் 5' 4" (செ. மீ. 162.5) மற்றும் மார்புச் சுற்றளவு 32" (செ. மீ. 81.25) ஆகவும் காணப்படுதல் வேண்டும். பெண் விண்ணப்பதாரிகளின ஆகக்குறைந்த உயரம் 5' 2" (செ.மீ. 156) ஆகக் காணப்படுதல் வேண்டும்.

8. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். புதிதாக இப்பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவோர் அரசாங்கத்தால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் வீதத்திற்கு அமைய விதவைகள் அநாதைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

2009.02.20 ஆந் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1589/30 உடைய நடவடிக்கை முறை ஒழுங்கு விதிக் கோவையின் உறுப்புரைகள் தொடர்புடையதாகக் காணப்படும்.

(ii) அரச சேவையில்/மாகாண அரச சேவையில் கடமையாற்றுவோர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் 1 வருட பரீட்சித்தல் காலத்தின் கீழ் நியமிக்கப்படுவர்.

(iii) பொ. நி. சு. 7/ 2007, 7/ 2007 (I) இன் பிரகாரம் நியமன திகதியிலிருந்து 05 வருட காலத்திற்குள் இரண்டாவது அரச மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். அவ்வாறு தேர்ச்சிபெற தாமதம் ஏற்படும் உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் இடைநிறுத்தம் செய்யப்படும்.

(iv) தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் கட்டாயமாக விமான நிலையங்களிலும், துறைமுகங்களிலும் இரவுக் கடமைகளில் பணியாற்றுதல் வேண்டும்.

9. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- (அ) திறந்த போட்டிப் பரீட்சை.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பட்டத்துடன் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடன் அல்லது தே. பொ. க. ச. பரீட்சையில் ஆங்கில மொழியில் "பீ" சித்தியடைந்துள்ள இலங்கை ஆண்/பெண் இருபாலாரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை.- பொ. நி. சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (iv) இன் பிரகாரம் MN 1-13,120 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த சம்பளம் பெறும் பதவி ஒன்றில் பத்து (10) வருட சேவைக் காலத்தை பூர்த்திசெய்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

(i) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தகைமைகளின் கீழ் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் 2 அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம்/ எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம் மற்றும் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தி ;

அல்லது

(ii) தே. பொ. க. ச. பரீட்சையில் அல்லது அதற்கு சமமான அல்லது உயர் பரீட்சையில் முதலாவது மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழியில் ''பீ'' சித்தியுடன் சித்தி யடைந்திருத்தல்.

10. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களில் மூலப் பிரதிகளை தேவைப்படும்போது சமர்ப்பிப்பதற்காக தயாராக வைத்திருத்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) பெற்றுக்கொண்டுள்ள ஆகக்கூடிய கல்விச் சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு.

11. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீடசையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளின் மொத்த கூட்டுத்தொகை கவனத்திற் கொள்ளப்பட்டு, அதன் பிரகாரம் வரிசைப்படுத்தப்பட்ட முன்னுரிமை ஆவணத்தின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக் குழு வினால் அனுமதிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் நடாத்தப்படும் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும். (நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படுவதுடன், பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்படும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது ;

(ii) பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அவர்களின் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும். பரீட்சைகள் நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும். ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவதுடன், இந்த ஒழுங்கு விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாவார் ;

(iii) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் மொழி ரீதியான முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும் ;

(iv) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான நுழைவுப் பத்திரமொன்றினை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்று கருதக் கூடாது.

12. **பாடத்திட்டம்**.-

(அ) திறந்த போட்டிப் பரீட்சை.-

(i) நுண்ணறிவு மற்றும் பொது அறிவு. நேரம் 1 மணித்தியாலயம். மொத்தப் புள்ளிகள் 100.
விண்ணப்பதாரர்களின் தர்க்க ரீதியான அறிவு, கணித ரீதியான திறமைகள், விவேகம் மற்றும் முடிவு செய்யும் ஆற்றலை அளத்தல், அண்மைக்கால இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியான தகவல்கள் மற்றும் சர்வதேச அரசியல், விஞ்ஞானம், தொழிநுட்பத் துறைகள் பற்றிய அறிவு புதிய விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புக்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட சிறு குறிப்பு மற்றும்/ அல்லது பல்தேர்வு வினாப்பத்திரம் ஒன்று.

(ii) ஆங்கில மொழி (நேரம் : 2 மணித்தியாலம்)
-100 புள்ளிகள்
வாசித்தல் மூலம் கிரகித்தல், கருத்தினை வெளிப்படுத்தல், தொடர்பாடல் திறன் என்பவற்றினை பரீட்சிக்கும் வினாப்பத்திரம் ஒன்று.

(iii) கணனி தொடர்பான அடிப்படை அறிவு (நேரம் : 1 மணித்தியாலம்)
-100 புள்ளிகள்

கணனி தொடர்பான அடிப்படை அறிவு MS Word, MS Excel போன்ற மென்பொருள் பாவனை பற்றிய அறிவினை மதிப்பிடுவதற்கான வினாப்பத்திரம் ஒன்று.

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை

(i) கிரகித்தலும் பொது அறிவும் (நேரம் : 2 மணித்தியாலம்)
மொத்தப் புள்ளிகள் 100
கருத்துக் கூறும் திறமை, சுருக்கம், பந்திகளைப் புரிந்துகொள்ளும் திறமை, தீர்மானங்களை மேற்கொள்ளும் திறமை, அண்மைக்கால இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியான தகவல்கள் மற்றும் சர்வதேச அரசியல், விஞ்ஞானம், தொழில்நுட்பத் துறைகள் பற்றிய அறிவு புதிய விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புக்கள் என்பற்றினை அடிப்படையாகக் கொண்ட சிறு குறிப்பு மற்றும்/ அல்லது பல்தேர்வு வினாப்பதிரம் ஒன்று.

(ii) ஆங்கில மொழி (நேரம் : 2 மணித்தியாலம்)

புள்ளிகள் 100

வாசித்தல் மூலம் கிரகித்தல், கருத்தினை வெளிப்படுத்தல், தொடர்பாடல் திறன் என்பவற்றினை பரீட்சிக்கும் வினாப்பத்திரம்

(iii) கணனி தொடர்பான அடிப்படை அறிவு (நேரம் : 1 மணித்தியாலம்)

-100 புள்ளிகள்

கணனி தொடர்பான அடிப்படை அறிவு, MS Word, MS Excel போன்ற மென்பொருள் பாவனை பற்றிய அறிவினை மதிப்பிடுவதற்கான வினாப்பத்திரம் ஒன்று.

13. பரீட்சார்த்திகளுக்கு விண்ணப்பப்பத்திரம் அனுப்பிய உடன் அதுபற்றி பரீட்சைகள், இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணபத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் உறுதி செய்யப்பட்ட பிரதிகள், பதிவுத் தபால் செய்த பற்றுச்சீட்டினையும், கொழும்புக்கு வெளியே ஒரு பிரதேசமாயின் அனுமதிப் பத்திரத்தை அனுப்புவதற்கு பெக்ஸ் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு, உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் தன்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது சிறந்ததாகும்.

14. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும், அவை நிரப்பப்படும் திகதியும் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அத்துடன் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகளில் சித்தி எய்திய பரீட்சார்த்திகளில் ஒருவருக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினருக்கோ நியமனம் வழங்கப்படாமல் இருக்கும் உரிமை குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உண்டு.

15. இந்த வர்த்தமானியின் 1 ஆவது பகுதி (IIஅ) பந்தியில் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகள் மற்றும் பரீட்சார்த்திகளுக்கான சட்டதிட்டங்கள், மதியுரைகள் இந்த பரீட்சைக்கும், ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கும் பொதுவானவையாக அமையும் என்பதனையும் கவனத்திற் கொள்க.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்.

கலாநிதி யூ. விதானபத்திரன,
செயலாளர்,
உள்ளக நிர்வாக அமைச்சு.

உள்நாட்டு நிர்வாக அமைச்சு,
இல. 51, சேர் அர்னஸ்ட் டி சில்வா மாவத்தை,
கொழும்பு 07,
2010.........

## இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2010

## Department of Sri Lanka Immigration & Emigration Limited/ Open Competitive Examination - 2010 For Recruitment Examination to the Posts of Authorized Officers

(அலுவலக உபயோகத்திற்கு)

| நீங்கள் விண்ணப்பிக்கும் பரீட்சை | |
|---|---|

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை - 1
திறந்த பரீட்சை - 2
மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த இரண்டிற்கும் - 3
(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

| பரீட்சைக்கு தோற்றும் மொழி | |
|---|---|

சிங்களம் - 2/ தமிழ் - 3/ ஆங்கிலம் - 4
(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1.0 பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(முதலெழுத்துக்களை இறுதியில் இடவும்)
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(உதாரணம் : RANJITH, S. A.)

1.2 முழுப்பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.3 முழுப்பெயர் :----.
(சிங்களத்தில்/ தமிழில்)

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.0 நிரந்தர முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் - இந்த முகவரிக்கே பரீட்சைக் கான அனுமதி அட்டை தபாலில் அனுப்பப்படும்.)

2.1 நிரந்தர முகவரி :----.
(சிங்களத்தில்/ தமிழில்)

2.2 அலுவலக முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.3 தொலைபேசி இலக்கம் :----.
(தனிப்பட்ட/ அலுவலக)

2.4 பால் : ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை பெட்டியில் இடவும்)

3.0 இனம் :----.
(சிங்களவர் - 1/இலங்கைத் தமிழர் - 2/இந்திய தமிழர் - 3/ முஸ்லிம் - 4/பர்கர்- 5)

உரிய இலக்கத்தை பெட்டியில் இடவும்)

4.0 விவாக நிலை

விவாகமானவர் - 2, விவாகமாகாதவர் - 1 ☐
உரிய இலக்கத்தை பெட்டியில் இடவும்)

5.0 பிறந்த திகதி :-
வருடம் ☐ மாதம் ☐ நாள் ☐

2010.05.17 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐

6.0 இந்தப் பதவிக்காக தகைமைபெறும் பரீட்சையில் சித்தியடைந்த மொழி :----.

7.0 கல்வித் தகைமைகள் :-

| பரீட்சையின் பெயர் | ஆண்டு | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 1. | 1. |
| 2. | | 2. | 2. |
| | | 3. | 3. |
| | | 4. | 4. |

8.0 உடல் தகைமைகள் :

(i) உயரம் செ. மீ. :----.
(ii) மார்பின் சுற்றளவு : செ. மீ. :----.

9.0 தற்போது வகிக்கும் பதவி பற்றிய விபரம் :
(அ) பதவி :----.
(ஆ) திணைக்களம்/அமைச்சு :----.
(இ) முதல் நியமனத் திகதி :----.
(ஈ) பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(உ) சம்பளத்திட்டம் :----.
(ஊ) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் :----.

10.0 யாதேனுமொரு குற்றச்சாட்டின் பேரில் நீர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக குறிப்பிட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :---.

11.0 நீர் அரச சேவையில் பதவியொன்றை வகித்திருந்த நிலையில் அதிலிருந்தும் விலக்கப்பட்டுள்ளீரா? :----.

12.0 பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :-

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்)

**கவனிக்க** : வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மேற்படி கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.
தொகை : ரூ. -----.

13.0 இங்கே குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவாறு உண்மை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் .................... மற்றும் .................... திகதிய பற்றுச்சீட்டு இங்கே ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதியளிக்கிறேன். மேலும், பரீட்சை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடந்துகொள்வதற்கும், இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைய தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடக்கும் நேரத்திலோ அல்லது பரீட்சையின் பின்னரோ என்னுடைய பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்த ஒரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் நான் கட்டுப்படுவதாகவும் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

14.0 (அ) **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல்**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................. நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்தவரெனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அந்தப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும், அவர் எனது முன்னிலையில் ............. ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.
சான்றுப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.

(ஆ) **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**
(மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம்)

எனது இலக்கம் :----.

................................. பணியாற்றும் திரு./ திருமதி/ செல்வி ......................... என்பவர் .................... பதவி வகிக்கின்றார் எனவும், அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் உறுதி செய்கிறேன். இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் ....................... சேவையிலிருந்து அவர் விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்படமாட்டார் என்பதையும் மேலும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை :----.
திகதி :----.

4-450

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.